(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 16.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 பெப்ரவரி 05, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

150/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) இன்றேல், அச்சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திருத்தங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

177/2024

கௌரவ ரவி கருணாநாயக்க, — நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் வங்கி கூட்டிணைக்கப்பட்ட திகதியினையும்;

(ii) தற்போதைய தலைவரினதும், பணிப்பாளர் சபை உறுப்பினர்களினதும் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் பெயர்களையும்;

(iii) கிளைகள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையினையும்;

(iv) இன்றுள்ளவாறாக பங்குகளுக்காக பெற்றுக்கொண்ட மூலதனம் யாதென்பதையும்;

(v) இது மூலதனப் போதுநிலைக்கான "பேசல்" (BASEL) தேவைப்பாடுகளுடன் இயைபுறுகின்றதா என்பதையும்;

(vi) இயைபுறாவிடின், அதை நிவர்த்திப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 10 வருடங்களுக்கான இலாபம் மற்றும் அடுத்த 3 வருடங்களுக்காக எதிர்பார்க்கப்படும் இலாபம் என்ன என்பதையும்;

(ii) மேலே (i) இன் பிரகாரம், கடந்த 10 வருடங்களில் முதலீட்டின் மீதான இலாபம் என்ன என்பதையும்;

(iii) கடந்த 5 வருடங்களில் நிர்வாகச் செலவு மற்றும் கடன் வழங்கல் வரம்பு வீதம் எவை என்பதையும்;

(iv) கடன் வழங்கல் வீதத்தின் சதவீதமாக நிர்வாகச் செலவு என்ன என்பதையும்;

(v) 2019 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஐந்தொகைப் பெறுமதிகள் என்ன என்பதையும்;

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறிவிப்பாரா?

(இ) (i) 1 பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கடன்கள் பதிவழிக்கப்பட்டனவா என்பதையும்;

(ii) அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பெயர்கள் என்ன என்பதைம்;

(iii) கடன் பதிவழிப்பதற்காக ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்ட சட்ட நடவடிக்கை முறைகள் எவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

243/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கொழும்பு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு அலகுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு அடுக்குமாடிக் குடியிருப்பு மற்றும் பிரதேச செயலகப் பிரிவு வாரியாக தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி வீட்டு அலகுகளுள் இற்றைவரை உறுதி வழங்கப்பட்டுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) உறுதி வழங்கப்படாத வீட்டு அலகுகளுக்கு உறுதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

249/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொவிட்- 19 காரணமாக இறந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்வது தொடர்பில் ஆராய்வதற்கான “நிபுணர்கள் குழு ” ஒன்றின் மூலம் சுகாதார அமைச்சின் கொள்கைத் தீர்மானம் தவறாக வழிநடத்தப்பட்டதாக 2022.11.29 அன்று சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சரினால் வெளியிடப்பட்ட கூற்றுடன் சுகாதார அமைச்சர் உடன்படுகின்றாரா? என்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட குழு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி குழு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவாக இருந்தால் —

(i) குறிப்பாக கொவிட் -19 காரணமாக மரணித்த உடல்களை அகற்றுவதற்கான அதன் விதப்புரைகளையும்;

(ii) நியமிக்கும் அதிகாரியையும்;

(iii) விசாரணை நியதிகள் மற்றும் /அல்லது ஆணையையும்;

(iv) உறுப்பினர்களின் பெயர்களையும் மற்றும் பதவிகளையும்;

(v) தவிசாளரின் பெயரையும்;

(vi) அது தொடர்ச்சியாகக் கூடுகின்றதா என்பதையும்;

(vii) இல்லையெனில்; அது கடைசியாகக் கூடிய திகதியையும்;

(viii) இதுவரையில் நடைபெற்றுள்ள கூட்டங்களின் எண்ணிக்கையையும்;

(ix) கூட்டங்கள் நடைபெற்ற இடத்தையும்;

(x) ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை வகித்த நபர்களின் பெயர்களை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

255/2024

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தில் நுகதூவ, “வலஹன்தூவ வத்தை” காணியை துண்டாக்கி பல்வேறு கருத்திட்டங்களுக்காக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்களின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களுக்காக இதுவரையில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) ஒவ்வொரு கருத்திட்டத்திற்குமான தேவை மற்றும் எதிர்ப்பார்க்கப்படும் நன்மைகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) அதன்படி, அத்தியாவசியமான கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(vi) அவற்றுள் சில கருத்திட்டங்கள் இன்றளவில் இடைநடுவில் நிறுத்தப் பட்டிருப்பின், அவற்றை மீள ஆரம்பிக்க முடியுமா என்பதையும்;

(vii) இன்றேல், மேற்படி கருத்திட்டங்களால் ஏற்க நேரிடும் நட்டம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தின சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும், பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 3.30 மணிக்கு 8(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் கட்டளை,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 டிசம்பர் 19 ஆம் திகதிய 2415/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.01.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 டிசெம்பர் 18 ஆம் திகதிய 2415/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.01.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 டிசெம்பர் 24 ஆம் திகதிய 2416/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.01.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்,— புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் 160அ, 161ஆ, 161இ, 161ஈ, 161உ, 161ஊ, 161எ, 161ஐ, 161ஒ மற்றும் 161 ஔ ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 204 ஆம் பிரிவின் கீழ் அப்போதைய வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2024 ஒக்டோபர் 22 ஆம் திகதிய 2407/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.01.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

289/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கொவிட் – 19" பெருந்தொற்றினால் இறந்தவர்களின் உடல்களை தகனம் செய்வதற்கு எதிராக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டதால், மட்டக்களப்பு "மஜ்மா நகர்" பிரதேசத்தின் காணி ஒன்றில் அவ்வுடல்கள் அடக்கம் செய்யப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(ii) மரணமடைந்த பின்னர் அவ்வாறு அடக்கம் செய்யப்பட்ட ஒவ்வொரு நபரினதும் பெயர், முகவரி, சமயம், பாலினம், சடலத்தின் பதிவிலக்கம், அடக்கம் செய்யப்பட்ட திகதி, அடக்கம் செய்யப்பட்டபோது மரணித்த ஒவ்வொருவர் சார்பிலும் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை, அவ்வாறு கலந்துகொண்ட நபர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் தனித்தனியே யாவையென்பதையும் ;

(iii) மரணித்த ஒவ்வொருவரின் நல்லடக்க நிகழ்வில் கலந்துகொண்ட நபர்களிடமிருந்து பணம் அறிவிடப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில், அறவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(v) பணம் அறவிடுவதற்காக அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள்/நபர்கள் பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---